# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாந் தவணைப் பரீட்சை - 2023

| தரம் - 10 | நாடகமும் அரங்கியலும் | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

### பகுதி - I

**சரியான விடையைத் தெரிவு செய்க.**

01. ஆற்றுகை கலையாக அமைவது.
    1) நாடகம் 2) சிற்பம் 3) ஓவியம் 4) கட்டிடம்
02. நாடகத்தின் முதன்மை படைப்பாளி என்பவர்.
    1) நெறியாளர் 2) நடிகன் 3) தயாரிப்பாளர் 4) ஒப்பனையாளர்
03. கலைகள் யாவும் போலச் செய்தலின் அடிப்படையே எனக் கூறியவர்.
    1) அரிஸ்டோட்டில் 2) பரதர் 3) பேனாட்ஷா 4) தொம்சன்
04. இலக்கியம் சுவைக்கப்படுவது.
    1) கேட்பதில் 2) பார்ப்பதில் 3) கற்பனையில் 4) யாவும்
05. கூத்து என்றவுடன் மனதில் தோன்றுவது.
    1) அரங்கு 2) பாட்டு 3) ஆட்டம் 4) இசை
06. ஈழத் தமிழ் அரங்கில் நெறியாள்கை பண்பினை அறிமுகம் செய்தவர்.
    1) பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை 2) பேராசிரியர் சு.வித்தியானந்தன்
    3) பேராசிரியர் சி. மௌனகுரு 4) கலையரசு சொர்ணலிங்கம்
07. நாடக தினம் கொண்டாடப்படுவது
    1) மார்ச் 27 2) மார்ச் 14 3) ஜனவரி 27 4) ஏப்ரல் 18
08. எழுத்து வடிவில் ஆக்கப்படும் கலை.
    1) இசை 2) நடனம் 3) இலக்கியம் 4) ஓவியம்
09. அரங்கின் பிரதான மூலக்கூறுகள் அடங்கிய தொகுதி.
    1) நடிகன், அரங்கு, பார்ப்போர் 2) நடிகன், வேடஉடை, இசை
    3) மேடை, பார்ப்போர், இசை 4) நடிகன், வெளி, ஒப்பனை
10. நாட்டிய என்ற வடமொழி சொல்லின் கருத்து.
    1) நடனம் 2) நாடகம் 3) சிற்பம் 4) இசை
11. வாய்மொழிச் சித்தரிப்பு இல்லாத கலை வடிவம்.
    1) கூத்து 2) இசை நாடகம் 3) ஊமம் 4) வானொலி நாடகம்
12. முன்னாயத்தமின்றி உணர்வு வெளிப்பாடு.
    1) புதிதளித்தல் 2) ஊமம்
    3) அரங்க விளையாட்டு 4) போல செய்தல்
13. வெள்ளை ஆடையுடன் தோன்றும் பாத்திரம்
    1) பொலீஸ் அதிகாரி 2) தாதி
    3) வைத்திய அதிகாரி 4) ராணுவ வீரர்

14. கோலம் ஆற்றுகை செய்யப்படும் அரங்க வெளி.

1) தானயம்பொல 2) சொக்கரி 3) களத்து மேடு 4) கரலிய

15. வகுப்பறையில் இருந்தவாறே மேற்கொள்ளப்படும் அரங்க விளையாட்டு

1) ஆடும் வீடும் 2) சின்னப்பானை பெரிய பானை

3) தலைவரைக் கண்டுபிடித்தல் 4) கரடியும் கிராம மக்களும்

16. நாடகத்தினை பயிற்றுவிப்பவர் எவ்வாறு அழைக்கப்படுவார்.

1) நெறியாளர் 2) தயாரிப்பாளர் 3) அண்ணாவியர் 4) நடிகன்

17. நாட்டிய சாஸ்திரம் எனும் நூலில் ஆசிரியர்

1) கா.சிவத்தம்பி 2) பேனாட்ஷா 3) அரிஸ்ரோட்டில் 4) பரத முனிவர்

18. அரங்கில் திடீர் முடிவுகளை மேற்கொள்ளும் கலைஞன்.

1) நடிகன் 2) தயாரிப்பாளர் 3) நெறியாளர் 4) ஒப்பனையாளர்

19. கணபதிப்பிள்ளையின் நாடகங்கள் அடங்கிய தொகுதி.

1) உடையார் மிடுக்கு, சங்கிலி, உறவுகள்

2) சங்கிலி, துரோகிகள், மாணிக்கமாலை

3) சங்காரம், சங்கிலி, உறவுகள்

4) பொருளோபொருள், துரோகிகள், மழை

20. “பொல்லார் நல்லோர் கனவு….” பாடல் இடம் பெறுவது.

1) காத்தவராயன்கூத்து 2) இராவணேசன் கூத்து

3) வசந்தன் கூத்து 4) காமன் கூத்து

21. சிங்கள மக்களுக்கு நவீன நாடகத்தை உருவாக்கியவர்.

1) சரச்சந்திரா 2) தர்மசேன 3) சுபசிங்க 4) குணதிலக

22. படச்சட்ட அரங்கை எத்தனை வகையாக பிரிப்பர்.

1) 5 2) 6 3) 8 4) 9

23. பேச்சுத்தமிழ் நாடகங்களை அறிமுகஞ் செய்தவர்.

1) பேரா.சிவத்தம்பி 2) பேரா.மௌனகுரு

3) பேரா.கணபதிப்பிள்ளை 4) நா.சுந்தரலிங்கம்

24. சிறுவர் நாடக முன்னோடி என அழைக்கப்படுவர்.

1) கோகிலா மகேந்திரன் 2) குழந்தை.ம.சண்முகலிங்கம்

3) பேரா.மௌனகுரு 4) பேரா.ஜெய்சங்கர்

25. அரங்கின் காண்பிய மூலகத் தொகுதி

1) வேடஉடை, ஒப்பனை, இசை 2) வேட உடை, காட்சி, இசை

3) காட்சி, ஒப்பனை, கைப்பொருள் 4) காட்சி, வேட உடை, ஒலி

26. ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்கள் உரையாடுவார்.

1) சொல்லாடல் 2) மோதுகை 3) கரு 4) கதை

27. ஒத்திகையினை மேற்கொள்ளும் கலைஞன்.

1) நடிகன் 2) நெறியாளர் 3) நாடகாசிரியர் 4) தயாரிப்பாளர்

28. நாடகம் தோற்றம் பெற்றது.

1) நடனத்தில் இருந்து　　2) நாடகத்திலிருந்து

3) சடங்கில் இருந்து　　4) பொம்மலாட்டத்திலிருந்து

29. நாடக மோடி எனும் பதம் குறிப்பது நாடகத்தின்

1) கருப்பொருளை　　2) மோதுகையினை

3) வடிவத்தினை　　4) காட்சியமைப்பாளர்

30. ஆற்றுகைகள் கலைகளின் அடிப்படைப் பண்பு,

1) நேரடித் தொடர்பாடல்　　2) நிலையான கலைவடிவம்

3) பிரதிபண்ணக் கூடியது　　4) தனியாக இரசிக்க கூடியது

31. சித்தரிப்புக்களின் வகைகள்.

1) 04　　2) 06　　3) 02　　4) 12

32. அரங்கிற்கான இசையின் நோக்கங்களிலொன்று.

1) நடிகர் பாடுவதற்கு உதவுதல்

2) நாடகப் பாடலுக்கு மெட்டைத் தருவது

3) பாத்திரங்களில் குரலை மேம்படுத்துவது

4) நாடக உணர்வுகளை பார்வையாளருக்கு கொண்டு செல்லல்

33. காட்சி அமைப்பின் பிரதான நோக்கம் அல்லாதது.

1) பகட்டாகவும் ஆரம்பரம் நிறைந்ததாகவும் இருக்கும்

2) அளிக்கையின் பிரதான மோடியை நிலை நிறுத்தும்

3) கதை நகர்வுக்கு உதவும்

4) காட்சி மாற்றத்தைத் தெளிவுபடுத்தும்

34. “தப்பு”வாத்தியத்தினை பிரதானமாகக் கொண்டு ஆடப்படுவது.

1) வசந்தன் கூத்து　　2) காமன் கூத்து

3) மகிடிக் கூத்து　　4) காத்தவராஜன் கூத்து

35. சிறுவர் நாடகத்தில் இயல்பாக அமையாதது.

1) ஆடல் பாடல் காணப்பரம்

2) வேடிக்கை வினோதம் இருக்கும்

3) சோகமான காட்சிகள் அதிகம் காணலாம்

4) மகிழ்வான முடிவு காணப்படும்


A


B


C


D


E

36. கைப் பொருளாக அமைவது.

1) A　　2) B　　3) C　　4) D

37. படம் E குறிப்பது.

1) பொட்டொளி 2) பரப்பொளி 3) கீற்றொளி 4) பாதஒளி

38. படம் A இல் உள்ள இசைக்கருவியினை பிரதானமாகக் கொண்டு ஆற்றுகை செய்யப்படும் கூத்து.

1) காமன்கூத்து 2) மகிடிக் கூத்து

3) வசந்தன் கூத்து 4) காத்தவராயன்கூத்து

39. படம் B யில் உள்ள நாடகாசிரியர்.

1) குழந்தை.ம.சண்முகலிங்கம் 2) பேரா.கணபதிப்பிள்ளை

3) பேரா.வித்தியானந்தன் 4) நா.சுந்தரலிங்கம்

40. வேடனை உச்சிய வெள்ளை புறா, தப்பிவந்த தாடி ஆடு போன்ற நாடகங்களின் ஆசிரியர்.

1) A 2) B 3) C 4) D

## பகுதி – II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக**

(01) 01) இசை நாடகம் ஒன்று தருக?

02) நீர் அறிந்த சிறுவர் நாடக ஒன்று தருக.

03) புதிதளித்தல் என்றால் என்ன?

04) கூத்து என்பது யாது?

05) வட்டக்களரியினை வேறு எவ்வாறு அழைப்பர்?

06) சடங்கிலிருந்து நாடகம் தோன்றியது எனக் கூறியவர் யார?

07) கரலிய எனும் அரங்கில் நிகழ்த்தப்படும் ஆற்றுகை வடிவம் ?

08) தோற்கருவி ஒன்றின் பெயரை குறிப்பிடுக?

09) நடிப்பில் காணப்படும் வகைகள் குறிப்பிடுக?

10) தொழில்நுட்பக்கலைகள் இரண்டு குறிப்பிடுக?

(12 புள்ளிகள்)

(02) 01) அரங்க விளையாட்டு என்றால் என்ன?

02) அரங்க விளையாட்டு நான்கு குறிப்பிடுக?

03) இவற்றில் ஒன்றை விளையாடும் முறையை ஒழுங்காக எழுதுக.

(3 + 3 + 6 = 12 புள்ளிகள்)

(03) 01) நாடகப் பண்புடைய சமயசடங்குகள் மூன்று தருக?

02) சடங்கில் காணப்படும் நாடக பண்புகள் நான்கு தருக?

03) மேலே நீர் கூறிய சடங்கு ஒன்றைக் குறிப்பிட்டு அச்சடங்கில் காணப்படும் நாடகப் பண்புகளை விளக்குக?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(04) 01) நடிப்புப் பயிற்சி என்றால் என்ன?

02) நடிகனுக்கு வழங்கப்படும் பிரதான பயிற்சிகள் எவை?

03) நடிப்புப் பயிற்சிகள் மூலம் நடிகன் பெற்றுக் கொள்ளும் பயன்களைக் குறிப்பிடுக

(3 + 3 + 6 = 12 புள்ளிகள்)

(05) 01) நாடகம் என்றால் என்ன?

02) நாடகத்துடன் தொடர்புடைய ஏனைய கலைகள் நான்கு குறிப்பிடுக.

03) நாடகமானது, ஓவியம், தொலைக்காட்சி நாடகம் என்பவற்றுடன் வேறுபடும் விதத்தினை விளக்குக?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(06) 01) நடிகனின் பணிகளை மதிப்பிடுக

02) நாடகத்தினை பார்ப்போரின் பங்கு பற்றி விபரிக்குக.

03) "நாடகம் முகிழ்த்தெழும் இடமாக அரங்கு அமைகிறது" இக்கூற்றை விளக்குக.

(4 x 3 = 12 புள்ளிகள்)

(07) யாதாயினும் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக

01) அசைவுகள்

02) சூரன் போர்

03) குளிர்த்தி

04) பறைமேளக்கூத்து

05) அரங்க மூலகம்

(4 x 3 = 12 புள்ளிகள்)